# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 10 | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

1) பின்வருவனவற்றுள் எது துணைத் தேக்கச் சாதனங்களை மட்டும் கொண்டுள்ளது?
   (1) இறுவட்டு, அச்சுப்பொறி, இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு, வன்வட்டு
   (2) வன்வட்டு, திரை, இறுவட்டு, பளிச்சீட்டு செலுத்தி
   (3) வன்வட்டு, இறுவட்டு, பளிச்சீட்டு செலுத்தி, இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு
   (4) இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு,இறுவட்டு, வன்வட்டு, வரையி

2) முதலாம் தலைமுறையிலிருந்து தற்போதைய தலைமுறை வரைக்குமான கணினித் தொழினுட்பத்தில் பின்வரும் எவை நடைபெற்றன?
   A– கணினிகளின் மின்நுகர்ச்சி அதிகரித்தல்
   B– மையமுறைவழியலகின் கதி ஒரு சதுர சென்ரிமீற்றரில் உள்ள திரான்சிற்றர்களின் எண்ணிக்கை குறைவடைதல்.
   C– கணினிகளின பருமன் குறைவடைதல்.
   (1) A, B மட்டும் (2) A, C மட்டும் (3) B, C மட்டும் (4) Cமட்டும்

3) மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பின்வரும் எத்தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டது?
   (1) வெற்றிடக் குழாய் (2) நுண்சில்லுகள்
   (3) ஒன்றிணைந்த சுற்றுக்கள் (4) திரான்சிற்றர்

4) பகுப்புப் பொறி யாரால் உருவாக்கப்பட்டது?
   (1) பிளேயஸ் பஸ்கால் (2) சாள்ஸ் பபேஜ்
   (3) ஜேன் மவுஜ்லி (4) ஹூவாட் ஐக்கன்

5) பின்வருவனவற்றுள் எது தரவாக கருதப்படலாம்?
   (1) கடந்த வருட மழைவீழ்ச்சியின் சராசரிப் பெறுமானம்
   (2) கடந்த வருட ஒவ்வொரு மாத மழைவீழ்ச்சிப் பெறுமானத்தின் ஒழுங்குபடுத்திய பட்டியல்
   (3) இன்றைய நாள் மழைவீழ்ச்சியின் பெறுமானம்
   (4) கடந்த வருட ஒவ்வொரு மாத மழைவீழ்ச்சியில் உயர் மழைவீழ்ச்சிப் பெறுமானம்

6) பின்வரும் படவுருவினால் காட்டப்படும் குறிமுறை எது?
   (1) QR Code (2) Barcode
   (3) ISBN (4) ATM

0 36000 29145 2

7) ஒரு கணினியில் அறிவுறுத்தல்களின் தொகுதியை பொதுவாக விபரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பதம் ………. ஆகும்.
   (1) மென்பொருள் (2) வன்பொருள் (3) நிலைபொருள் (4) உயிர்ப்பொருள்

8) ஓர் இடத்துரி வலையமைப்புடன் (LAN) உடன் கணினிகளை இணைப்பதற்கு பின்வரும் சாதனங்களில் எது பயன்படுத்தப்படும்?
   (1) வலையமைப்பு இடைமுக அட்டை (2) வழிப்படுத்தி
   (3) சேவையகம் (4) தீச்சுவர்

9) ஓர் இடத்துரி வலையமைப்பு ஒன்றின் அடிப்படை மூலகங்கள் பின்வருவனவற்றுள் எது/ எவை?
A– வலைச் சேவையகம் B– ஊடுகடத்தும் ஊடகம்
C– தொடர்பாடல் சாதனங்கள் D– இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணினிகள்
(1) B, C மட்டும் (2) B, Cமற்றும்D மட்டும்
(3) A, Cமற்றும்D மட்டும் (4) A, B, C, D எல்லாம்

10) பின்வருவனவற்றுள் எது/எவை ஒரு கணினிக்கு தரவை உள்நுழைப்பதற்கு பயன்படுத்தப்படும்?
A - வடமில்லா சுட்டி B– வருடி
C– லேசர் அச்சுப்பொறி D– தொடுதிரை
(1) A, Bமற்றும்C மட்டும் (2) B, Cமற்றும்D மட்டும்
(3) A, Bமற்றும்D மட்டும் (4) A, B, C, D எல்லாம்

11) ஒரு கணினியின் எக்கூறு தரவு தொடர்பான செய்பணியைச் செய்கின்றது?
(1) மைய முறைவழி அலகு (2) முதன்மை நினைவக அலகு
(3) உள்ளீட்டு அலகு (4) துணைத் தேக்க அலகு

12) பின்வரும் எந்தத் துறைகள் கணினியுடன் அச்சுப்பொறி ஒன்றினை இணைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது?
A- PS/2 B – Serial C – USB D – Parallel
(1) A, B மற்றும் C மட்டும் (2) B, Cமற்றும்D மட்டும்
(3) A, Cமற்றும்D மட்டும் (4) A, B, C, D எல்லாம்

13) பிரதான மின்வலு செயலிழக்கும் சந்தர்ப்பத்தில் காப்புவலுவை வழங்குவதற்கு பயன்டுத்தப்படும்சாதனம் பின்வருவனவற்றுள் எது?
(1) பல்லூடக ஏறியி (2) வரையி
(3)தடைப்படாத மின்வழங்கல் வலு (4) மின்வழங்கல் வலு

14) துவித எண் 110011 இற்கு சமவலுவான பதின்ம எண்
(1) 102 (2) 50 (3) 51 (4) 100

15) பின்வருவனவற்றுள் எது மிகவும் குறைந்த பெறுமனத்தைக் கொண்டுள்ளது?
(1) $53_{10}$ (2) $110110_2$ (3) $62_8$ (4) $1B_{16}$

16) யுனிக்கோட் குறிமுறையாக்கத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் எண்ணிக்கை ……….. ஆகும்.
(1) 65525 (2) 65553 (3) 65536 (4) 65563

17) பின்வருவனவற்றுள் எது 2 TB இற்குச் சமவலுவானது?
(1) $2^{10}$GB (2) $2^{20}$MB (3) $2^{30}$KB (4) $2^{21}$MB

18) ASCII குறிமுறையில் வரியுரு 'B' ஆனது 1000010 இனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. பின்வருவனவற்றுள் எத்தெரிவு 'CAD' என்ற சொல்லை பிரதிநிதித்துவப்படுத்தும் துவித வடிவமாகும்?
(1) 1000011 1000010 1000100 (2) 1000011 1000001 1000100
(3) 1000011 1000100 1000001 (4) 1000010 1000011 1000001

19) துவித எண் 1110101011 இற்குச் சமவலுவான பதினறும எண்?
(1) DA3 (2) 3AB (3) 1653 (4) 7251

20) x என்ற எண்முறைமையினால் முன்வைக்கப்படும் பின்வரும் எண்ணைக் கருதுக.

$7901_x$

மேற்குறித்த அடி x ஆக கொண்டஎண் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது எது?

(1) x இன் அடி 8, 10 மற்றும் 16 ஆகும் (2) x இன் அடி 2, 8 மற்றும் 16 ஆகும்

(3) x இன் அடி 10 மற்றும் 16 ஆகும் (4) x இன் அடி 8 மற்றும் 10 ஆகும்

21) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A– ஒரு பேனையின் விலை $10111_2$ ஆகும்

B - இரண்டு பென்சிலின் விலை $1010_2$ ஆகும்.

பின்வருவனவற்றுள் எது இரண்டு பேனையினதும் ஒரு பென்சிலினதும் விலையாகும்?

(1) $11011_2$ (2) $100011_2$ (3) $10011_2$ (4) $110011_2$


22) வழங்கப்பட்ட தருக்கசுற்றின் வருவிளைவிற்குச் சமவலுவான பூலியன் கோவை பின்வருவனவற்றுள் எது?

(1) $(\bar{A}.\bar{B}).\overline{(B+C)}$

(2) $(A.B).(\bar{B}+\bar{C})$

(3) $\overline{(A.B)}.(\bar{B}.\bar{C})$

(4) $\overline{(A.B)}.(\bar{B}+\bar{C})$





23) வழங்கப்பட்ட தருக்கசுற்றின் வருவிளைவு 1 ஆவதற்கு A,B உள்ளீடுகளுக்கு முறையே வழங்க வேண்டிய பெறுமானங்களைக் காண்க?

(1) 0, 0

(2) 1, 0

(3) 0, 1

(4) 1. 1




24) A.(A+B) எனும் தருக்க கோவைக்குச் சமவலுவானது பின்வருவனவற்றுள் எது?

(1) A (2) B (3) A+B (4) A.B

25) வழங்கப்பட்ட மெய்நிலை அட்டவணையினால் பின்வரும் எந்தப் பூலியன் கோவை மெய்யுறுத்தப்படுகின்றது?

(1) $A+\bar{A}$ (2) A

(3) $A.\bar{A}$ (4) $\bar{A}$

| A | $\bar{A}$ | வருவிளைவு |
|---|---|---|
| 1 | 0 | 0 |
| 0 | 1 | 0 |

26) பணிச்செயல் முறைமை பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறனாதை தெரிவு செய்க?

(1) Ms DOS என்பது கட்டளைக் கோட்டு இடைமுகத்தைப் பயன்படுத்தும் பணிச்செயல் முறைமையாகும்.

(2) இசுறு வினக்ஸ், ஹன்தன லினக்ஸ் என்பன இலங்கையாரால் தேசியமயமாக்கப்பட்ட இரு திறந்த பணிச்செயல் முறைமையாகும்.

(3) Ms Windows என்பது வரைவியல் பயனர் இடைமுகத்தைப் பயன்படுத்தும் பணிச்செயல் முறைமையாகும்.

(4) Ms DOS என்பது வரைவியல் பயனர் இடைமுகத்தைப் பயன்படுத்தும் பணிச்செயல் முறைமையாகும்.

27) மென்பொருள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது/சரியானவை எது/எவை?

A - பிரயோக மென்பொருளானது தரவுகளைத் தகவல்களாக மாற்றுகின்றது

B- முறைமை மென்பொருளானது வன்பொருட்களைக் கட்டுப்படுத்துகின்றது.

C- கணினியில் நிறுவப்பட்டுள்ள ஏனைய மென்பொருட்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் முகாமை செய்தல் போன்றவற்றிற்கு பயன்பாட்டு மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.


(1) A மட்டும் (2) A, B மட்டும் (3) B, C மட்டும் (4) A, B, C எல்லாம்

28) கோவைகளை பிரதியெடுத்தல் / வெட்டியெடுத்தல் கருமங்களுக்கும் அவற்றை குறுகிய காலத்திற்குப் பேணவும் …………………… உதவும்.

(1) Clipboard (2) காப்பெடுத்தல்

(3) வட்டுப் பரீட்சிப்பான் (4) வட்டுத்துண்டாக்கல்

29) கீழே தரப்பட்ட கோப்புக்களில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளின் கோப்பின் பெயரையும், பருமனையும் காட்சிப்படுத்துகின்றது?




(1) Teacher's list, 13.9KB

(2) Competency 6.9, 1.45 MB

(3) excelenglish, 819KB

(4) தேர்ச்சி 9_10இ 87.8KB

30) திறக்கப்பட்டுள்ள ஆவணத்தின் பெயர் …………………… இல் காட்சிப்படுத்தப்படும்.

(1) நாடா (Ribbon) (2) சுருள் பட்டை (Scroll Bar)

(3) நிலைமைப் பட்டை (Status Bar) (4) தலைப்புப் பட்டை (Title Bar)

31) ஒரு ஆவணத்திலுள்ள அனைத்து உருப்படிகளையும் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் குறுக்குவழிச் சாவி பின்வருவனவற்றுள் எது?

(1) Ctrl+B (2) Ctrl+A (3) Ctrl+D (4) Ctrl+K

32) ஒரு சொல்முறைலழிப்படுத்தல் மென்பொருளில் வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. தற்போது சதுர வடிவம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. Ctrl+D என்ற குறுக்குவழிச் சாவியினை அழுத்தும் போது பின்வரும் எச்செயற்பாடு நடைபெறும்?

(1) அனைத்து வடிவங்களுள் அழிக்கப்படும்.

(2) சதுர வடிவம் அழிக்கப்படும்.

(3) சதுர வடிவத்தின் இன்னொரு பிரதி தோன்றும்.

(4) மூன்று வடிவங்களும் குழுக்களாக்கப்படும்.

33) பக்க அமைவில் (Page Orientation) காணப்படுபவை பின்வருவனவற்றுள் எது/எவை?

A - landscape B–Portrait C–Gutter

(1) A, B மட்டும் (2) B, C மட்டும் (3) A, C மட்டும் (4) A, B, C எல்லாம்

34) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் Header and Footer ஆனது பின்வருவனவற்றுள் எது/எவற்றைக் கொண்டிருக்கும்?

A–பாடம் B–படவுருக்கள் C–பக்க எண்

D – திகதி E– நேரம்

(1) A, B, C மட்டும் (2) A, B, D, E மட்டும்

(3) A, C, D, E மட்டும் (4) A, B, C,D, E எல்லாம்

35) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் அட்டவணை ஒன்றில் அருகருகேயுள்ள கலங்களை ஒரு கலமாக்குவதற்குப் பயன்படுத்தப்படுவது எது?

(1) Merge Cells (2)Split Cells (3) Split Table (4) Divide Column

36) பக்க ஓரம் (Page margin )ஒன்றினது வகையாக அமையதாது பின்வருவனவற்றுள் எது?

(1) இடது (left) (2) மையம் (center)

(3) வலது (right) (4) அடி (bottom)

37) படம் ஒன்றில் தேவையற்ற பகுதிகளை நீக்கும் செயற்பாடு …………. என அமைக்கப்படும்.

(1) Hiding (2) Bordering (3) Cropping (4) Cutting

38) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் தொடர்ச்சியான கடிதங்களில் வடிவமைக்கப்பட்ட இடங்களில் பெயர்கள், முகவரிகள் மற்றும் பிற பாடங்களைத் தானாக செருக பயன்படுத்தப்படும்பகுதிக்கு என்ன பெயர்?

(1) Mail Merge (2) Page Layout (3) Screenshot (4) Word Wrap

39) பின்வரும் கோப்புப் பெயர் நீட்சிகளைக் (File name extensions) கருதுக

A. Odt B. docx C. doc D rtf

சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கோப்புகளுக்கு மேற்குறித்தவற்றில் எவை செல்லுபடியானவை?

(1) A,Bஆகியன மாத்திரம் (2) B,Cஆகியன மாத்திரம்

(3) C,Dஆகியன மாத்திரம் (4)A,B,C,Dஆகியன எல்லாம்.

40) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் பின்வரும் எந்த படவுரு ஒரு ஆவணத்தின் இடது மற்றும் வலது விளிம்புகளில் பாடத்தை நேர்ப்படுத்துவதைக் குறிக்கிறது?



(1) (2) (3) (4)

பகுதி II

1).i) சுகாதாரத்துறைக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு இரண்டு தருக.

ii) ஒத்திசைக்கணனிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

iii) $BD_{16}$ என்பதை எண்மஎண்ணிற்கு மாற்றுக.

iv) $\overline{X.Y} + X.\bar{Y}$ என்பதற்கு உரிய தர்க்கப்படலையை வரைக.

v) பணிச்செயல்முறைமையில் கோப்புக்களை அணுகுவதற்கு பயன்படுத்தப்படும் இரு அணுகுமுறைகளும் எவை?


vi) வட்டுபிரிவிடலின் நன்மைகள் ஒன்று தருக.

vii) நிகழ்த்துகை மென்பொருளின் கோப்புநீட்சி யாது?

viii) வன்வட்டு, பதிவேடு, பதுக்கு, இறுவட்டு ஆகிய சேமிப்பு சாதனங்களை அவற்றின் கொள்ளளவின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.

ix) கணினியில் எண்களை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்த பயன்படுத்தப்படும் எண்முறைமை யாது?

x) கீழே தரப்பட்ட வரைபடம் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இருமஎண் பெறுமானம் யாது?




2) a) பின்வரும் செயற்பாடுகள் எந்த மின்னரசாங்கத்தின் சேவையினுள் அடங்குகின்றது.

i) இந்திய பிரஜை ஒருவர் இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களை அறிதல்.

ii) இலங்கைப் பிரஜை ஒருவர் தனது வாகன உத்தரவுச்சீட்டை புகுப்பித்தல்



iii) இலங்கை அரசாங்கத்தால் முகாமைத்துவ உதவியாளருக்கு விண்ணப்பம் கோரப்படல்.

b) உமது பாடசாலையில் தகவல்தொழில்நுட்ப பாடத்திற்கு நிகழ்நிலை பரீட்சையொன்றை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் பயனர்சொல், கடவுச்சொல் ஆகியன தரப்படுகின்றது. இவற்றை உள்நுழைப்பதன் மூலம் முறைமையினுள் உட்பிரவேசித்து நிகழ்நிலை பரீட்சையை செய்து submit கட்டளை அழுத்துவதன் மூலம் பரீட்சைக்கான புள்ளி திரையில் காட்சிப்படுத்தப்படும் மேற்கூறிய சூழ்நிலைக்காட்சியை கருத்திற்கொண்டு உள்ளீடு, வெளியீடு, முறைவழியாக்கம் ஆகிய ஒவ்வொள்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

c) பின்வரும் சாதனங்களை கண்டுபிடித்தவர்களின் பெயரை எழுதுக.

1. கூட்டற்பொறி 2. வித்தியாசப்பொறி 3. MARK1

3) a) பின்வரும் துறைகளை பெயரிடுக.

i)  ii)  iii)  iv) 

b) பின்வரும் செயற்பாடுகள் ஏத்தரவு ஊடுகடத்தல் முறைமையினுள் உள்ளடங்குகின்றது,

1. ZOOM வகுப்பில் மாணவர்கள் பங்குபற்றல்.

2. கமலா தனது நண்பி சுமிக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் ஒன்றை அனுப்புகின்றாள். சுமி அத்தகவலை பார்வையிட்டபின் அதற்கு மின்னஞ்சலூடாக பதில் அனுப்புகின்றாள்.

3. வீதி ஒன்றினூடாக ஒருதிசையில் மாத்திரம் செல்லமுடியும்.

c) பின்வரும் செயற்பாடுகளுக்குரிய ஊடகங்களை பட்டியலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. CCTV கமராக்களில் பயன்படுத்தப்படுவது


2. தொலைக்காட்சியுடன் வடமில்லா ஒலிபெருக்கியை இணைத்தல்.

3. மாணவன் ஒருவன் சேய்மைகட்டுபடுத்தி மூலம் பல்ஊடகளறிகையை தொடக்குதல்.
(முறுக்கிய கம்பிச்சோடி, ஓரச்சுவடம், ஒளியியல் நார், நுண்ணலை, வானொலி அலை, செங்கீழ்க்கதிர்)

4) a) சுரேசின் கணினியின் வன்வட்டின் கொள்ளளவு அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

1. வன்வட்டின் மொத்த கொள்ளளவை TB இல் தருக.

2. Song இற்குஒதுக்கப்பட்ட கொள்ளளவை GB இல் தருக.





b) 1). கீழே தரப்பட்ட பூரணமற்ற பூலியன்கோவை (A AND NOT(B)) OR C ஐக் கொண்ட உண்மைஅட்டவணையை கருதுக. இங்கு சிலவிடுபட்ட உள்ளீடுகளும் வெளியீடுகளும் "?" அடையாளத்தால் குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டவணையை விடைத்தாளில் பிரதிசெய்து "?"அடையாளமிட்ட கலங்களின் இடைவெளிகளில் பொருத்தமான பெறுமானத்தை எழுதுக.

| உள்ளீடுகள் | | | வெளியீடு |
|---|---|---|---|
| A | B | C | (A AND NOT(B)) OR C |
| 1 | 1 | 1 | ? |
| 1 | 1 | 0 | ? |
| ? | 0 | 1 | 1 |
| 1 | ? | 0 | 1 |
| 0 | 1 | ? | 1 |
| 0 | 1 | 0 | ? |
| ? | 0 | 1 | 1 |
| ? | ? | ? | 0 |

2) மேலே தரப்பட்ட பூலியன்கோவைக்குரிய தர்க்கப்படலையை வரைக.

5) ஒரு பாடசாலையில் கணினி ஆய்வுகூடத்திலுள்ள கணினிகள் எவ்வாறு இணையத்துடன் தொடுக்கப்பட்டுள்ளன என்பதை கீழே உள்ள படம் காட்டுகின்றது.




1). A,B,C ஆகிய முகப்பு அடையாளங்களுக்குரிய சாதனங்களை இனங்கண்டு எழுதுக.

2). வட்டத்தினுள் காட்டப்பட்ட பிரதேசத்திலுள்ள வலையமைப்பு வகையைக் குறிக்க பயன்படுத்தும் பெயர் யாது?

3). பாடசாலை கணினி ஆய்வுகூடத்தில் உள்ளது போன்று வட்டத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள வலையமைப்பு வகையைப் பயன்படுத்துவதன் இருஅனுகூலங்களை எழுதுக.

4). சாதனம் B இன் பயன்பாடு யாது?

5). வட்டத்தினுள் உள்ள மேசைக்கணினிகள் எந்த வலையமைப்பு இடத்தியலிலுள்ளது?

6) a) ஒரு மாணவன் P வகையிலுள்ள முன்வைப்பு மென்பொருளை பயன்படுத்தி ஒரு அறிக்கையை தயாரிக்க வேண்டியுள்ளது. அவன் அதற்காக Q உள்ள பணிச்செயல்முறைமையால் வழங்கப்படும் R எனும் சேவையை பயன்படுத்தி தனக்கு வன்வட்டில் கோப்புறையொன்றை உருவாக்கினான். தனது தகவல்களை பாதுகாக்க S எனும் சேவையை பயன்படுத்தி அதை காப்புச்செய்தான். அதில் தனது அறிக்கையை சேமித்தான். அறிக்கை முழுமையடைந்தும் அதை பளிச்சீட்டு நினைவகத்திற்கு மாற்றுவதற்கு முன் பளிச்சீட்டு நினைவகத்தை T இன் சேவையில் ஒன்றான நச்சுஎதிர்மென்பொருளால் வருடிகின்றான். U இனால் முகாமை செய்யப்படும் அச்சுப்பொறியை பயன்படுத்தி அறிக்கையை அச்சுப்பிரதி செய்கின்றான்.

மேலேயுள்ள முகப்பு அடையாளங்களுக்குரிய பதங்களை இனங்கண்டு எழுதுக.

(முறைமை மென்பொருள்,பிரயோகமென்பொருள், பயன்பாட்டுசேவை மென்பொருள், முறைவழிமுகாமை, சாதனமுகாமை, காப்புமுகாமை, கோப்பு முகாமை)

b) பணிச்செயல்முறைமை தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் சரியா / பொய்யா எனக் குறிப்பிடுக.


1. கோப்புறைகள், கோப்புக்களையும் வேறு கோப்புறைகளையும் கொண்டிருக்கலாம்.

2.ஒரு பணிச்செயல்முறைமையானது பயனருக்கு தனித்தனி புகுபதிவுகளை வழங்கலாம்


3. பணிச்செயல்முறையால் கோப்பிற்கு பெயர் வழங்கப்படுகின்றது,

4. கட்டளைக்கோட்டு இடைமுகமானது பயனருக்கு வரைவியல் இடைமுகத்தை வழங்குகின்றது.

7) ஒரு சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்திப் பகுதியாக வடிவமைக்கப்பட்ட(formatted) ஒரு பாட ஆவணம் கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் வடிவமைக்கப்படவுள்ள மூலகங்கள் **A** தொடக்கம் **D**என முகப்படையாளமிடப்பட்டுள்ளன.




மேற்குறித்த ஆவணத்தை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் இடைமுகத்தின் கருவிப்பட்டை உரு 2 இல் காணப்படுகின்றது. பின்வரும் கொள்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் முகப்பு அடையாளங்களை எழுதுக.




உரு 2

i. முகப்படையாளம் A யினால் காட்டப்படும் ஆவணத்தின் தலைப்பை **COVID-19** ஆகமாற்றுதல்

ii. முகப்படையாளம் A ஐமையப்படுத்தல்.

iii. முகப்படையாளம் Cயினால் காட்டப்படும் இடத்தில் படத்தினை உட்புகுத்தல்.

iv. முகப்படையாளம் Bயினால் காட்டப்படும் சொல்லை தடிப்பாக்குதல்.

v. முகப்படையாளம் Bயினால் காட்டப்படும் சொல்லுக்கு அடிக்கோடிடுதல்.

vi. ஆவணத்தில் உள்ள எழுத்துக்கூட்டல்களைச் சரிபார்த்தல்.

vii. ஆவணத்தில் அச்சிடமுடியாத வரியுருக்களை மறைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்

viii. முகப்புஅடையாளம் Dஐ இணையத்தள முகவரிமூலம் இணைப்பை உருவாக்கி கொரோனா தொடர்பான செய்தியை தொடர்புபடுத்தல்

ix. ஆவணத்தின் பக்கங்களுக்கு விளிம்புகளை இடுதல்(Border)

x. ஆவணத்தில் உள்ள வரிகளுக்கிடையிலான இடைவெளியினை தேவைக்கேற்ப மாற்றியமைத்தல்.